

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 52 கோடி ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை மக்கள் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திறந்து வைத்தார். இதனைத்தொடர்ந்து பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மீனம்பாக்கம் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி நகர்ப்புற நலவாழ்வு மையங்களில் பணியை துவக்கி வைத்தார் அப்பொழுது கழக தீர்மான குழு செயலாளர் மீ.அ. வைத்தியலிங்கம் மாமன்ற உறுப்பினர் அமுத பிரியா வட்ட கழக செயலாளர் ப. கிருஷ்ணமூர்த்தி, வட்ட கழக நிர்வாகிகள் உட்பட பலர் இருந்தனர்.

### பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார் தலைமையில்

## பம்மல் வடக்குப் பகுதியில் 'ஓரணியில் தமிழ்நாடு' புதிய உறுப்பினர் சேர்ப்பு!

### மேயர் ச.வசந்தகுமாரி தொடங்கி வைத்தார்!

காஞ்சிபுரம், ஜூலை 5- தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்குப் பகதியில் "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்த்தல் முகாமை பகுதிக் கழகச் செயலாளர் த. ஜெயகுமார் தலைமையில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்த குமாரி கமலக்கண்ணன் துவக்கி வைத்தார்.

3.7.2025 - வியாழக் கிழமை காலை 9 மணிக்கு அனகாபுத்தூர் அம்பேத்கர் சிலை அருகில் 4வது வட்டத்தில் வட்டச் செயலாளர் மு.நி. தமிழ் குமரன் முன்னிலையில் 27வது பாகத்தில் ஓரணியில் உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பகுதி அவைத் தலைவர் கே.சந்திரன் பகுதி துணைச் செயலாளர்கள் மு. ஸ்ரீதர் க. ஜெயசீலன், ஜி. பப்பிதா, பகுதி பொருளாளர் ச. பிரபு, மாநகர கழக பிரதிநிதிகள் சி. பார்த்தசாரதி, இரா. குமரேசன், க.சுந்தரமூர்த்தி, இரா. பாபுஜி, வட்டக் கழகச் செயலாளர்கள் ப.அன்பழகன், க. மோகன், ப. ஆண்டவன், இ. பாலாஜி, டி.எம். ஜோசப், மாநகராட்சி மன்ற உறுப்பி னர்கள் கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ, விஜயகுமார், சண்முகசுந்தரி, ஜெயகுமார் - சித்ராதேவி, முரளி தரன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிவ்ராகிகள், கழக முன்னோடிகள் கழக இணைஞரணி, மாண வரணி, மகளிரணியினர் அனைவரும் கலந்து கொண்டனர்.

இறுதியில் பம்மல் வடக்கு பகுதி இளைஞரணி செயலாளர் ஞா. பிரபு, ஆ. செந்தில்குமார், ஆர். முரளிதரன் ஆகியோர் நன்றி கூறினர்.



தமிழ்நாடு மாநில நுகர்வோர் கூட்டுறவு மொத்த. விற்பனை பண்டக சாலைகள் தொ.மு.ச.மாநில நிர்வாகிகள் கூட்டம் மாநிலத் தலைவர் து.பிச்சை தலைமையில் பொருளாளர் இரா.பழனியப்பன்,துணைத் தலைவர் மரு. இரா.ராஜன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் தொ.மு.ச. பொதுச்செயலாளர் சு.பத்மநாபன் தீர்மானங்களை விளக்கி பேசினார். இதில் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் வரவேற்புரை! க.செல்வம் எம்.பி. முன்னிலை!

## திருப்போரூர் பேரூர் தி.மு.க. செயலாளர் மு.தேவராஜ் இல்லத் திருமண விழா! துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைக்கிறார்!

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - ஆர்.எஸ்.பாரதி பங்கேற்பு!

காஞ்சிபுரம், ஜூலை. 05 - கழகத் தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர் அவர்க ளின் நல்லாசியுடன், காஞ்சிபு ரம் வடக்கு மாவட்டம், திருப்போரூர் பேரூர் தி.மு.க. செயலாளர், பேரூராட்சி மன் றத் தலைவர் மு.தேவராஜ் - பேரூராட்சி மன்ற தலைவர் செல்வி தேவராஜ் ஆகியோ ரின் புதல்வர் காஞ்சிபுரம் மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் தே. செங்குட்டுவனுக்கும், உத்திர மேரூர் செ. மதிவாணன் - ம. கீதா ஆகியோரின் புதல்வி ம. பிரித்திகாவிற்கும் திருமண விழா (07.07.2025 - திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு மேல், திருப்போரூர், காலவாக்கம் ஓ.எம்.ஆர். சாலையில் அமைந்துள்ள சைதன்யா திருமண மஹா லில் நடைபெறுகிறது.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வரவேற்புரை ஆற்றுகி றார்.

திருமண விழாவில் காஞ்சி புரம் நாடாளுமன்ற உறுப்பி னர் க.செல்வம், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். எஸ்.பாலாஜி, திருப்போரூர் வடக்கு ஒன்றியச் செயலா ளர், ஒன்றியப் பெருந்தலை வர் எஸ்.ஆர்.எல்.இதயவர் மன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, ஜி.சி.அன்புச்செழியன், மாவட்டப் பொருளாளர் வெ.விசுவ நாதன், தெற்கு ஒன்றிய செயலாளர் பைய னூர் சேகர், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் ஆர்.டி.அரசு, திருக்க ழுக்குன்றம் பேரூர் செயலா ளர், பேரூராட்சித் தலைவர் ஜி.டி.யுவராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வீ.விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகிக் கின்றனர்.

கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்களின் தலைமை யேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

திருமண விழாவில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, கழக அமைப்புச் செய லாளர் ஆலந்தூர் ஆர்.எஸ். பாரதி, மீ.அ.வைதியலிங்கம், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, இ.கருணாநிதி எம்.எல்.ஏ, வர லட்சுமி மதுசூதனன் எம். எல்.ஏ, பனையூர் மு.பாபு எம். எல்.ஏ, த.துரைசாமி, து. மூர்த்தி, பெ.விஸ்வ நாதன், படப்பை ஆ.மனோக ரன், மல்லை இ.சத்யா, வன்னி யரசு, க.வசந்த குமாரி, செம்பு ருத்தி துர்கேஷ், கோ. காமராஜ், க.அன்புச்செல்வன், ஆதிமாறன், சூ.க. விடுதலைச் செழியன், எஸ்.எம்.கே.அண் ணாதுரை, அ.தமிழ்மாறன், இ.சங்கர், பூ.லோகநாதன் மற் றும் கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

## "அன்னம் தரும் அமுதகரம்" 135வது நாள்!

### வில்லிவாக்கம் மேற்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஜூலை.5- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார் பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன் றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 135 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன் னிட்டு நேற்று (04.7.2025) வில்லிவாக்கம் மேற்கு பகுதி: 1) வட்டம் 104 (அ), நேரு நகர், திருமங்கலம் வட்ட



செயலாளர் ப.லோகுபாபு. 2) வட்டம் 104, 18 ஆவது பிர தான சாலை, அண்ணாநகர், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு "தமிழ்நாட்டு நலன்க ளையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக் காக ஒன்றுபட்டு போராடு வோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அ. வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ.ஜெயின், வே. வாசு, லதா வாசு.எம்.சி. டி.வி. செம் மொழி.எம்.சி. சாவித்திரி வீர ராகவன், சுதா தீனதயாளன். எம்.சி வானவில் விஜய், எம். சுரேஷ் வில்லிவாக்கம் மேற்கு / கிழக்கு வட்ட கழக செய லாளர்கள்: சிட்கோ சி.சேகர், ஆர்.தீனதயாளன், க. சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமாசங்கர், சொ. முருகேசன், ப.லோகுபாபு, ஜெ.தங்கராஜ், எ.வேதா, சீ.விக்னேஷ், ச.மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, ஒருங்கி ணைப்பாளர்கள்: சொ. வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அப ரஞ்சி, அசோக் ஜெயின், பி. விஜயகுமார், ம.அசோக்கு மார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோ டிகள் கலந்து கொண்டனர்.

### மீ.வே.கர்ணாகரன் முன்னிலை! முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

## சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கழக அரசின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம்!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமை! அத்திப்பட்டு சாம்ராஜ் - க.சுபத்ரா - கே.பி.சங்கர் - ஜெ.அருண் சிறப்புரை!

சென்னை, ஜூலை 5- சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறி ஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன் னிட்டு நாடு போற்றும் நான் காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு கழக ஆட்சியின் சாதனைகள் விளக்க தெருமு னைப் பிரச்சாரக் கூட்டம் இன்று (5.7.2025 - சனிக்கி ழமை) மாலை 6 மணி அளவில் போஸ்ட் ஆபீஸ் தெரு, சோழ வரம் பேருந்து நிலையம் அரு கில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு எம். ஜெகன், ஆர்.குமரன், என். விஜய், ஆர்.சி.சிவசங்கரன், ஜே.மைக் டைசன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்திற்கு சோழவ ரம் தெற்கு ஒன்றிய கழக செய லாளரும் சோழவரம் ஒன்றிய துணைப் பெரும் தலைவரு மான மீ.வே.கர்ணாகரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன் குமார், ஏ.காசிம் முகம்மது, நா.செல்வ சேகரன், கே.எம். துரைவேல், ப.சீனிவாசன், கி.வீரம்மாள், செ.அரசு, இரா. விஜயன், பா.சேகர், பொன். கோதண்டன், டி.ஜி.ஆர்.மணி வண்ணன், கேபிள் த.வேல் கணேசன், சி.எஸ்.எஸ்.டி.சீனி வாசன், ஜி.கே.இனியவன், மோரை மு.சதீஷ்குமார் ஆகி யோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்தில் சென்னை வடகி ழக்கு மாவட்டக் கழக செயலா ளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்கிறார்.

மேலும் இக்கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் கள் அத்திப்பட்டு சாம்ராஜ், க.சுபத்ரா, கழக மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, தொகுதிப் பொறுப் பாளர் டாக்டர் ஜெ.அருண் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் வீ.கண்ண தாசன், வீ.கவி கணேசன், ஜி. சந்திர போஸ், ஆர்.பத்மா பன், பா.மதிவாணன், வி.ராம நாதன், குறிஞ்சி எஸ்.கணே சன், மு.ராஜேந்திரன், டி. இராமகிருஷ்ணன், பி.அறிவு அழகி, எம்.ஆனந்தன், என். பரந்தாமன், ஜெ.ஜெய் மதன், டி.எ.ராஜி, இரா.முருகேசன், பி.சாந்தி, எஸ்.நந்தகோபால், ஜி.துக்காராம், புழல் எம்.நாரா யணன், ஜி.தயாளன், சி.அற்புத ராஜ், ஜி.ராஜேந்திரன், ஐ. ஜான், என்.முகிலன், எஸ்.ஏ.சீனிவாசன், ஆர். டி.மதன்குமார், எம்.எம்.செந் தில், சன் முனியாண்டி, எம். கோமளவள்ளி, எம்.அம்மு, பி.வெங்கடேசன், து.கோபால், வீ.தியாகராஜன், ஜி.தேவநே சன், சுந்தரராஜ், கு.தமிழ்மணி, ஆர்.டி.குமார், காஞ்சி சு.மதி வாணன், க.காசிநாதன், ரா.உத யராஜ், கே.ரவிக்குமார், ஜெ. அப்துல் ஆசன், கே.லட்சுமி காந்தன், மோகனசுந்தரம், சி. கோவிந்தராஜ், சி.ஏழுமலை மற் றும் மாவட்ட அணிகளின் நிர் வாகிகள், முன்னாள் நிர்வாகி கள், கழக மூத்த முன்னோடிகள், சோழவரம் தெற்கு ஒன்றிய ஊராட்சி கிளைக் கழக செய லாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் எம்.ஜெகன் ஏற்பாடு செய்துள் ளார்.

நிறைவாக எம்.எஸ்.மணி கண்டன், கே.பாலாஜி, ஆர். ரூபேஷ், எம்.நிர்மல் குமார், எஸ்.ராஜன், எம்.ராகுல், மணி கண்டன், உதய பிரகாஷ், அகி லன், பரத், பிரசாந்த், பாலாஜி, வினோத், மணிகண்டன் ஆகி யோர் நன்றி கூறுகின்றனர்.

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலை!

## திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றிய ஊராட்சி பாக வாரியாக கள ஆய்வுக் கூட்டம்!

### கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் தலைமை! ஒன்றியச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி அறிக்கை!

காஞ்சிபுரம், ஜூலை. 5 - திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணா நிதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்பு தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஊராட்சி வாரியாக கழக வாக்குச்சாவடி நிலை முகவர்கள் 100 வாக்காளர்க ளுக்கு ஒரு முகவர் மற்றும் தேர்தல் பணிக் குழு உறுப்பி னர்கள் கள ஆய்வுக் கூட்டம் இன்று (05.07.2025 - சனிக்கி ழமை) ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் நடைபெறுகி றது.

கடந்த 7.6.2025 அன்று நடைபெற்ற மாவட்டக் கழ கச் செயலாளர்கள் மற்றும் தொகுதி மேற்பார்வையாளர் கள் கூட்டத்தில் "ஓரணியில் தமிழ்நாடு" என்கிற கொள்கை முன்னெடுப்பின் படி ஒவ்வொரு சாவடியிலும் 30 விழுக்காடு வாக்காளர் களை புதிய உறுப்பினர்க ளாக இணைத்தல் மற்றும் ஊராட்சி பாக வாரியாக கள ஆய்வுக் கூட்டம் குறித்து கழ கத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் வழி காட்டுதலின்படி கீழ்கண்ட நாட்களில் ஊராட்சி பாக வாரி யாக நடைபெற உள்ளது.

திருப்பெரும்புதூர் தொகு திப் பார்வையாளர் கே.ஜி. பாஸ்கர் சுந்தரம் தலைமையி லும் மாவட்டக் கழகச் செய லாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன், கழகப் பொரு ளாளர், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு ஆகியோர் முன் னிலையில் கள ஆய்வு கூட் டம் நடைபெற உள்ளது.

சிங்கிலிபாடி ஊராட்சி - 17 வது பாகத்திற்கு காலை 9 மணிக்கும், ஏகனாபுரம் ஊராட்சி - 14 வது பாகத் திற்கு காலை 9.30 மணிக்கும், ஏகனாபுரம் ஊராட்சி - 15 வது பாகத்திற்கு காலை 10 மணிக்கும், மதுரமங்கலம் ஊராட்சி - 19 வது பாகத் திற்கு காலை 10.30 மணிக் கும், மதுரமங்கலம் ஊராட்சி - 20 வது பாகத்திற்கு காலை 11 மணிக்கும், காந்தூர் ஊராட்சி - 21 வது பாகத் திற்கு காலை 11.30 மணிக் கும், காந்தூர் ஊராட்சி - 22 வது பாகத்திற்கு, மதியம் 12 மணிக்கும், சோகண்டி ஊராட்சி - 38 வது பாகத் திற்கு மதியம் 12.30 மணிக் கும், சோகண்டி ஊராட்சி - 39 வது பாகத்திற்கு மதியம் 1 மணிக்கும், மேல்மதுரமங்க லம் ஊராட்சி - 23 வது பாகத் திற்கு மாலை 3 மணிக்கும், இராமானுஜபுரம் ஊராட்சி - 24 வது பாகத்திற்கு மாலை 3.30 மணிக்கும், கீரநல்லூர் ஊராட்சி - 25 வது பாகத் திற்கு மாலை 4 மணிக்கும், சேந்தமங்கலம் ஊராட்சி - 27 வது பாகத்திற்கு மாலை 4.30 மணிக்கும், பொடவூர் ஊராட்சி - 29 வது பாகத் திற்கு மாலை 5 மணிக்கும், பாப்பாங்குழி ஊராட்சி - 28 வது பாகத்திற்கு மாலை 5.30 மணிக்கும் கள ஆய்வுக் கூட் டம் நடைபெறுகிறது.

எனவே மேற்கண்ட ஊராட்சிகளின் பாகங்க ளுக்கு உரிய வாக்கு சாவடி நிலை முகவர்கள், தேர்தல் பணிக் குழு உறுப்பினர்கள் (31 நபர்கள்) 100 வாக்காளர் களுக்கு ஒரு முகவர் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், இளை ஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள், ஏனைய அணிகளின் அமைப் பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன் னணியினர் அனைவரும் தவ றாமல் கலந்து கொண்டு கூட் டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பெரும்பு தூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர், ஒன்றிய பெருந் தலைவர் எஸ்.டி.கருணாநிதி அறிக்கை விடுத்துள்ளார்.

### மயிலை பகுதி 122வது வட்டக் கழகம் சார்பில்

## ஓரணியில் தமிழ்நாடு - வாகனம் மூலம் விளக்கவுரை!

### வட்டச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார் தலைமையில்!

சென்னை, ஜூலை 5- நமது கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி, சென்னை, தென் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., ஆகியோர் அறிவுறுத்தலின்படி, வட்டக் கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா சுரேஷ்குமார் தலைமையில், ஓரணியில் தமிழ்நாடு மற்றும் மெட்ராஸ் TO சென்னை வளர்ச்சி குறித்து வாகனத்தின் மூலம் தெருக்களில் விளக்க வுரை இன்று (5.7.2025, சனிக் கிழமை) மாலை 6 மணியளவில் 122வது வட்டத்தில் வோல்டாஸ் பின்புறம் ஆலையம்மன் கோயில் தெரு சந்திப்பு மற்றும் ஆழ்வார்பேட்டை தெரு திருவள்ளுவர் சாலை சந்திப்பில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

### ஆ.ராசா எம்.பி. - அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

## வேளச்சேரி தொகுதிக்குட்பட்ட 15 வட்டங்களின் பாகமுகவர்கள் கூட்டம்!

### பகுதிக் கழகச் செயலாளர்கள் துரை கபிலன் - அரிமா சு.சேகர் வேண்டுகோள்!

சென்னை, ஜூலை 5- வேளச்சேரி சட்டமன்ற தொகுதி கழக நிர்வாகிகளுக்கு பகுதிக் கழ கச் செயலாளர்கள் துரை கபிலன், அரிமா சு.சேகர் ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

வேளச்சேரி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 15 வட்டங்களில் உள்ள 261 பாக முகவர்கள் கூட்டம் இன்று (05.07.2025 சனிக்கி ழமை) காலை 11.00 மணிய ளவில் வேளச்சேரி காந்தி சாலையில் உள்ள கபாலி திருமண மண்டபத்தில் பகுதி கழக செயலாளர்கள் துரை கபிலன், அரிமா சு. சேகர் ஆகியோர் முன்னி லையில் நடைபெற உள் ளது.

நிகழ்ச்சியில் பாக முக வர்களுக்கு களப் பணி யாற்ற அறிவுரைகள் வழங்க கழக துணை பொது செய லாளர் சென்னை மண்டல பொறுப்பாளர் ஆ. இராசா, சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் - மருத்து வம் மற்றும் மக்கள் நல்வாழ் வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமி ழச்சி தங்கபாண்டியன், மாநிலங்களவை உறுப்பி னர் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு மற்றும் வேளச்சேரி தொகுதி பொறுப்பாளர் சாய் ஜெய காந்த் ஆகியோர் கலந்து கொண்டு பாக முகவர்களுக்கு அறிவுரை கள் வழங்குகின்றனர்.

இதில் வேளச்சேரி தொகுதிக்கு உட்பட்ட 15 வட்ட கழக செயலாளர்கள் தங்கள் பாக முகவர்களுடன் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டு கொள்கிறோம்.

இக்கூட்டத்தில் வேளச் சேரி தொகுதிக்கு உட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர் வாகிகள், வட்ட கழக செய லாளர்கள், பாக முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு வேளச்சேரி தொகுதி யின் பகுதி கழக செயலாளர் கள் துரை கபிலன் மற்றும் அரிமா. சு.சேகர் அறிக்கை விடுத்துள்ளனர்.

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! வடக்கு ஒன்றிய செயலாளர்

## இலத்தூர் கே.எஸ்.இராமச்சந்திரன் படத்திறப்பு நிகழ்ச்சி!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. பங்கேற்பு!



காஞ்சிபுரம், ஜூலை.5, இலத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளரும், இலத்தூர் ஊராட்சி ஒன் றிய முன்னாள் பெருந் தலைவ ரும், நினைவில் வாழும் கே.எஸ்.இராமச்சந் திரன் அவர்களின் படத்தி றப்பு நிகழ்ச்சி நாளை (6.7.2025 ஞாயிற்றுக்கி ழமை) மாலை 6 மணிக்கு சோழக்கட்டு கிராமத்தில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக் கிறார்.

மண்டல தேர்தல் பொறுப்பாளர் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல் வம், ஒன்றிய முன்னாள் அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்ச கன் எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டு நினைவில் வாழுதும் கே.எஸ். இராமச்சந்திரன் அவர்களின் திருவு ருவப் படத்தை திறந்து வைத்து புக ழஞ்சலி செலுத்து கின்றனர்.

சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலர சன் எம்.எல்.ஏ., பனை யூர்மு.பாபு எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ப.அப் துல் மாலிக் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வா கிகள், கழக அணிகளின் நிர் வாகிகள், உள்ளாட்சி மன் றப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக் கின்றனர்.

நிகழ்ச்சிக்கு வருகை தரு வோரை, இலத்தூர் ஒன்றி யப் பெருந்தலைவர் திருமதி சாந்தி ராமச்சந்திரன், இலத் தூர் வடக்கு ஒன்றிய இளை ஞர் அணி அமைப்பாளர் கே.எஸ்.ஆர். கார்த்திகே யன், சோழக்கட்டு கிராமம் கே.எஸ்.ஆர்.கீர்த்திதரன் ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை செய்துள்ள னர்.

### சென்னை கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கே.கே.ஜெய்குமார் தந்தை

## எம்.பி.கதிர்வேல் 16ஆம் நாள் நினைவஞ்சலி - திருவுருவப் படத்திறப்பு நிகழ்ச்சி!

### கழக நிர்வாகிகள் பங்கேற்பு!

செய்யூர், ஜூலை 5 செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் வட்டம் மேலப் பட்டு கிராமம் நினைவில் வாழும் பெருமாள் அவர்க ளின் இளைய மகனும் கே. கிருஷ்ணவேணி கணவரும் சென்னை கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கே.கே.ஜெய்குமார் தந்தை யும் தமிழ்நாடு காவல் சிறைத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான எம்.பி.கதிர் வேல் அவர்கள் 20.6.2025 வெள்ளிக்கிழமை அன்று மறைவெய்தி னார்.



அன்னாரது 16ஆம் நாள் நினை வஞ்சலி மற்றும் திரு வுருவப்படத் திறப்பு நிகழ்ச்சி இன்று (5.7.2025 சனிக்கி ழமை) இரவு 7 மணி யளவில் செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் வட்டம் மேலப்பட்டு கிராமத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடை பெறுகிறது.

இந்நிகழ்ச்சி யில் சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், எழும்பூர் பகுதிக் கழக நிர்வாகிகள், லத்தூர் ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்து கின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி பார்வதி நாராயணசாமி

### ஜூலை 5 (2023)



தனது இளமைப்பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு கழக மகளிர் அணியில் பணியாற்றத் தொடங்கியவர்.

வடசென்னை மாவட்டம், ஆர்.கே.நகர் பகுதி மகளிர் அணி அமைப்பாளராக மூன்று முறையும், மாவட்ட மகளிர் அணி தலைவராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தில் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மக்கள் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம், இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.